

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2024) சென்னை, கொளத்தூர், பெரியார் நகர் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயின்ற 355 நபர்களுக்கு தையல் இயந்திரங்கள், 125 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகள் மற்றும் 1000 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர், பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி. ஹெலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2024) கொளத்தூரில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு (Dialysis) மற்றும் மறுவாழ்வு மையம் மற்றும் பகிர்ந்த பணியிடம் (CoWorking Space) கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் முனைவர் க. பொன்முடி, பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி மற்றும் பலர் உடன் இருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2024) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், பகுதிச் செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2024) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் முனைவர் க. பொன்முடி, பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வடலூரில் ஈட்டி எறிதல் பயிற்சியின் போது உயிரிழந்த

# மாணவன் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக.2-

கடலூர் மாவட்டம், வடலூரிலுள்ள தனியார் பள்ளியில் நடைபெற்ற ஈட்டியெறிதல் பயிற்சியின்போது உயிரிழுந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், பார்வதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த செல்வன். கிஷோர் (வயது 15) த/பெ. திருமுருகன் என்பவர் வடலூரிலுள்ள தனியார் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த நிலையில் 24.07.2024 அன்று பள்ளி மைதானத்தில் நடைபெற்ற ஈட்டியெறிதல் பயிற்சியின்போது எதிர்பாராதவிதமாக சிறுவன் கிஷோரின் தலையில் ஈட்டி பாய்ந்ததால் பலத்த காயமடைந்த நிலையில் புதுச்சேரி மற்றும் சென்னையிலுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொண்டு, பின்னர் 30.07.2024 அன்று முண்டியம் பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இச்சம்பவத்தில் உயிரிழுந்த சிறுவனின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### தமிழ்நாடு மாநில

# மகளிர் ஆணையத்தின் தனி வலைதளம்!

## அமைச்சர் பி.கீதாஜீவன் தொடங்கி வைத்தார்!

சென்னை,ஆக.2-

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் பிரத்யேக வலைத்தளத்தினை 30.07.2024 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் துவக்கி வைத்தார்கள்.

பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் மற்றும் பெண்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. 19.03.1993ஆம் நாள் முதல் அரசாணையின் மூலம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வந்த இவ்வாணையம் 30.07.2008 முதல் சட்ட ரீதியான அமைப்பாக (Statutory Body) செயல்பட்டு வருகிறது. கடைசியாக இவ்வாணையம் 11.02.2022 அன்று மாற்றியமைக்கப்பட்டு (Reconstitution), திருமதி.அ.ச.குமரி அவர்களின் தலைமையில் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களால் பாதிக்கப்படும் மகளிர் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு நேரடியாகவும், மின்னஞ்சல் வாயிலாகவும், தபால் மூலம் புகார் மனுக்களை அளித்து வருகின்றனர். இவற்றிக்கு ஆணையம் காவல் துறை, நீதித்துறை, மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மாவட்ட சமூகநல அலுவலர்கள், பாதுகாப்பு அலுவலர்கள், ஒருங்கிணைந்த சேவை மையங்கள், தன்னார்வ சமூக அமைப்புகள் ஆகியவற்றின் உதவியுடன் உரிய தீர்வு காண முயல்வதுடன் நேரடி விசாரணைகள் வாயிலாகவும் சில புகார் மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணப்பட்டு வருகிறது. பொதுவெளியில் பெண்கள் பாதிக்கப்படும் போது அத்தகைய பிரச்சனைகளிலும் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொள்ளுகிறது.

குடும்ப வன்முறை, சொத்துபிரச்சனை மற்றும் எதிர்பாராத இன்னல்களை எதிர்கொள்ளும் மகளிர் சட்ட ரீதியான ஆலோசனைகள் பெறுவதற்கும் மகளிர் ஆணையம், மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு உதவியுடன் இலவச சட்டசேவை மையத்தினை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தடுப்பு, பெண்களுக்கான சட்டங்கள் மற்றும் உரிமைகள், சமூக வலைத்தளங்களில் பெண்கள் பாதுகாப்பு, பெண்களுக்கான உதவி எண்கள் ஆகியவை குறித்து அனேக கருத்தரங்குகளை நடத்தி மகளிருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மேலும் சட்டம், சமூகபணி, சமூகவியல், பொது நிர்வாகம் போன்ற இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் பயிலும் மாணவ, மாணவிகளும் இங்கு உள்ளுறை பயிற்சி பெற்று பயனடைந்து வருகின்றனர்.

எனவே, மகளிர் ஆணையத்தின் பணிகள் அனைத்து மகளிருக்கும் சென்றடைந்து அவர்கள் பயணடையும் வகையிலும், தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இக்கால கட்டத்தில் மகளிர் அனைத்து தகவல்களையும் இணையதளம் வாயிலாக தெரிந்து கொள்ள விரும்புவதால் ஆணையத்திற்கென முதன்முறையாக தனி வலைதள முகவரி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முகவரி www.tnwomencommission.tn.gov.in. இவ்வலைதளத்தில் ஆணையத்தின் அமைப்பு, பணிகள், தொடர்பு கொள்ளுவதற்கான ஊடக முகவரிகள், பெண்களுக்கான சட்டங்கள் மற்றும் தொடர்புடைய துறைகளை அணுகுவதற்கான முகவரிகள் ஆகியவை விரிவாக வழங்கப்பட்டுள்ளன.

மேலும் வருங்காலத்தில் இணையதளம் வாயிலாகவே மகளிர் தங்கள் புகார்களை பதிவு செய்யவும், அவற்றின் மீது ஆணைய வாயிலாக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், புகார் மனுக்களின் மீது தாமத நடவடிக்கை கண்காணித்திடவும் ஏதுவாக இவ்வலைத்தளத்தில் தனி இணைப்பு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மகளிர் தங்கள் புகார்களை இணையம் வாயிலாக பதிவு செய்யவும், அவை நிலுவையில் உள்ள அலுவலகங்கள் விபரம், விசாரணை நிலவரம் குறித்து எளிதாக அறிந்து கொள்ளவும் ஏதுவாகும்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவி திருமதி. அ.ச. குமரி, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் செயலர் மற்றும் சமூக நல ஆணையர் திருமதி. வே. அமுதவல்லி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, அரசு இணைச் செயலாளர் ச.வளர்மதி, மற்றும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### கொத்தமங்கலத்தில் தரம் உயர்த்தப்பட்ட – புதிய

# அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம்!

## ப.சிதம்பரம் எம்.பி. - அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கார்த்தி சிதம்பரம் எம்.பி. திறந்து வைத்தனர்!

புதுக்கோட்டை, ஆக. 2 -

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கொத்தமங்கலம் கிராமத்தில், மாநிலங்களவை உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தினை, மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம், சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் 28.07.2024 அன்று திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி, முத்து லெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத் தின்கீழ் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகங்களை வழங்கினார்கள். தமிழக அரசு ஏழை, எளிய மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் பொதுமக்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சைகள் வழங்கிடும் வகையில், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவம் சார்ந்த கட்டடங்கள் கட்டி திறந்து வைக்கப்பட்டு வருகிறது. அதன்படி கொத்தமங்கலம் கிராமத்தில் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் 257.65 சதுர மீட்டர் பரப்பளவில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த புதிய கட்டடத்தில், மருத்துவ அலுவலர் அறை, மருந்தக அறை, கழிப்பறையுடன் கூடிய பிரசவ அறை, அவசர சிகிச்சைப் பிரிவு, ஆய்வக அறை, ஊசி செலுத்தும் அறை, கட்டுப்போடும் அறை, பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கழிப்பறை உள்ளிட்ட பல்வேறு அறைகளுடன் சிறப்புடன் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்கள் மருத்துவத்திற்காக நீண்ட தூரம் சென்றுவருவது தவிர்க்கப்பட்டு, தங்களது இல்லங்களுக்கு அருகாமையிலேயே மருத்துவ சிகிச்சைகள் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இப்பகுதி பொது மக்கள் அனைவரும், இந்த புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தினை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு நோயற்ற நல் வாழ்வு வாழ்ந்திட வேண்டும்.

இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (அறந்தாங்கி) மருத்துவர் நமச்சிவாயம், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, மேனாள் திருமயம் சட்டமன்ற உறுப்பினர் ராம.சுப்புராம், ஆலங்குடி வட்டாட்சியர் பெரியநாயகி, வட்டார மருத்துவ அலுவலர் ராம்சந்தர், கொத்தமங்கலம் ஊராட்சிமன்றத் தலைவர் சாந்தி வளர்மதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### செம்பனார்கோயில் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர்

# அமிர்த.விஜயகுமார் தாயார் அ.சரஸ்வதி அம்மாள் மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

மயிலாடுதுறை, ஆக. 2 -

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூர் வடக்கு வீதியைச் சேர்ந்த செம்பனார்கோயில் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் மறைந்த ஆர்.அமிர்தலிங்கம் மனைவியும், செம்பனார்கோயில் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் அமுர்த.விஜயகுமார் தாயாருமான அ. சரஸ்வதி அம்மாள் நேற்று (1.8.2024) அதிகாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த அ.சரஸ்வதி அம்மாளுக்கு மகன் அ.பால சுப்பரமணியன், அ.ரெத்தினக்குமார், அமுர்த.விஜயக்குமார். மகள்கள் ராஜேஸ்வரிவரதராஜ், மலர்விழிசந்திரபோஸ், தேன்மொழி கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.

திருக்கடையூர் வடக்கு விதியில் வைக்கப்பட்ட உடலுக்கு கழகத்தினர் ஏராளமானவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் மேற்கு ஒன்றியம் சிவனாகரத்தைச் சேர்ந்த சந்திரா என்பவரது வீடு திடீர் தீ விபத்தில் வீடு எரிந்து சேதம் அடைந்ததையடுத்து மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செலயாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் சேதம் அடைந்த வீட்டை பார்வையிட்டு அந்த குடும்பத்திற்கு நிதி மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் குத்தாலம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.ராஜா, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் கே.மகேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.